**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 22.07.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உணவு பதப்படுத்தும் இயந்திர உற்பத்தியாளர்களிடம் கருத்து கேட்கும் கருத்தரங்கம்**

உணவு பதன்செய் பொறியியல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், சென்னை இணைந்து உணவு பதப்படுத்தும் இயந்திர உற்பத்தியாளர்களிடம் கருத்து கேட்கும் கருத்தரங்கை 22 ஜூலை 2024 அன்று கோவையில் ஏற்பாடு செய்தனர். தமிழகத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட உணவு இயந்திர உற்பத்தியாளர்கள் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர். உணவு பதன்செய் பொறியியல் துறை பேராசிரியர் முனைவர் எஸ்.கணபதி வரவேற்புரை வழங்கினார்.

முதன்மையர் (வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்) முனைவர் A.ரவிராஜ், பொருளாதார வளர்ச்சியில் உணவு பதப்படுத்தும் தொழில்கள் ஆற்றிடும் முக்கிய பங்கை எடுத்துரைத்து சிறப்புரை ஆற்றினார். உழவன் விவசாயி உற்பத்தியாளர் அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரி திரு.சி.டி.குமார், தனது சிறப்புரையில் வேளாண் உணவுத் தொழில்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை குறிப்பிட்டு, பிரச்சனைகளை சமாளிப்பதற்கான நவீன அணுகுமுறைகளை எடுத்துரைத்தார். பதிவாளர் முனைவர். R.தமிழ் வேந்தன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உணவு பதப்படுத்தும் தொழில்களின் பங்களிப்பை வலியுறுத்தி தலைமையுரை ஆற்றினார். முனைவர் கே.அழகுசுந்தரம், தலைமை நிர்வாக அதிகாரி, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், சென்னை விவசாயம் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறையை மேம்படுத்துவதற்கான கலந்துறையின் நோக்கத்தையும், உற்பத்தியாளர்களுக்கான திட்டங்களையும் எடுத்துரைத்தார். உணவு பதப்படுத்தும் இயந்திர உற்பத்தியாளர்கள் தங்கள் வணிக ஊக்குவிப்பில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எடுத்துரைத்தனர். முனைவர் ஏ.சுரேந்திரகுமார் நன்றியுரையுடன் நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**